DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : CC.No.2/2025 | Deposition of Witness for : PW5 |
| Name : ஜெயமுருகன் | Father/Husband Name : சேர்மதுரை |
| Age : 45 | Village : சொக்கலிங்கபுரம் |
| Taluk : திருச்செந்தூர் | Calling : தோட்ட வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 20 August 2026.

A1 and A2 are absent. Petition U/s.317 Cr.P.C/355 BNSS filed and allowed.

**முதல் விசாரணை :-**

1. நான் தற்போது சொக்கலிங்கபுரத்தில் குடியிருந்து தோட்ட வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். **பார்வை மகசரில் உள்ள அ.சா.5 ன் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** கடந்த 16.06.2024 அன்று காலை சுமார் 9.30 மணியளவில் சொக்கலிங்கபுரத்தில் உள்ள வெங்கட்ராமானுஜபுரம் செல்லும் வழியில் உள்ள கவிதா என்பவரின் தோட்டத்திற்கு அருகில் நானும் மனோவும் பேசிக்கொண்டிருந்தபோது பிரச்சனை நடந்ததாக சொல்லி போலீசார் விசாரித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது நான் கையொப்பம் செய்தேன். அந்த பார்வை மகசரில் என்னுடன் மனோ என்பவரும் கையாப்பம் செய்தார். இதுசம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

2. நான் கையொப்பம் செய்துகொடுத்த பார்வை மகசரில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அ.சா.1 எனக்கு வேண்டிய நபர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, நான் சம்பவ இடத்தில் நின்றுகொண்டிருந்தேன், அதனால் சாட்சியம் அளிக்கிறேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** : இல்லை

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.08.20 17:17:22 +0530

Judicial Magistrate, Sathankulam.